

# இன்ப மொழி

குழந்தைப் பாடல்கள்



மணி மன்றம்

# மதலையின் சிந்தனை

வண்டாய் யானும் பிறந்திருந்தால்
மதுவை உண்டு களித்திடுவேன்
மலரை மனையாய் நினைத்திடுவேன்

குயிலாய் யானும் பிறந்திருந்தால்
குளிர இசைகள் பாடிடுவேன்
கொம்பை வீடாய்க் கருதிடுவேன்

மயிலாய் யானும் பிறந்திருந்தால்
மகிழ்ந்து நடனஞ் செய்திடுவேன்
மரத்தை மனையாய் எண்ணிடுவேன்

கிளியாய் யானும் பிறந்திருந்தால்
கிளியின் பொந்தை வீடென்று
கருதிக் காலங் கழித்திடுவேன்

காகமாய் யானும் பிறந்திருந்தால்
காற்றைச் சுத்தமாய் வைத்திடுவேன்
கட்டிய கூட்டில் தங்கிடுவேன்

புறுவாய் யானும் பிறந்திருந்தால்
புவியில் எங்கும் திரிந்திடுவேன்
பொந்தை வீடாய் நினைத்திடுவேன்

மதலை யாகப் பிறந்ததினால்
மாதா முலையிற் பாலுண்டு
மனையில் தவழ்ந்து களிக்கின்றேன்.

எஸ். உமைதாணுப்பிள்ளை

மணி வெளியீடு-8

# இன்பமொழி

## குழந்தைப் பாடல்கள்

### பிராணிகள்

கவிமணி
தேசிகவிநாயகம் பிள்ளை முதலிய
பல அறிஞர்கள் பாடியவை

தொகுத்தவர்:
ப. நீலகண்டன்

பதிப்பாளர்:
தி. சி. குழந்தைவேலன்

மணி மன்றம்

தமிழ்நூல் வெளியீட்டகம்

மதுரை ரோடு :: திருச்சிராப்பள்ளி

முதற்பதிப்பு: சர்வசித்து, ஆனி (ஜூலை, 1947).

விலை
அணா 6

சிட்டி அச்சகம், மதுரை ரோடு, திருச்சி. 2825

## முன்னுரை

'மழலை மொழி' என்னும் பெயரில், குழந்தைகள் விரும்பும் பாடல்களைத் தொகுத்துச் சில நூல்கள் வெளியிட விரும்பினேன். எனது விருப்பத்திற்கிணங்கிப் பல அறிஞர்களாகிய நண்பர்கள் தமது அரிய பாடல்களை மகிழ்வுடன் அனுப்பி உதவினார்கள். அவர்கள் யாவர்க்கும் எனது நன்றி உரியதாகும்.

'மழலை மொழி' என்னும் புத்தகம் முன்னர் வெளி வந்தது. பிராணிகள் என்னும் கருத்துக்கிணங்கிய சில பாடல்கள் இத்தொகுதியில் வெளியாகின்றன. இவற்றைப் பதிப்பிப்பதில் ஊக்கம் காட்டித் திருத்தமுறஅமைத்தவர் எனது நண்பர் திரு. **தீ. சி. குழந்தைவேலன்** அவர்கள்.

அறிவுரை, பொருள்கள் பற்றிய 'அமுதமொழி' என்னும் பாடல் தொகுதி விரைவில் வெளிவரும். அடுத்து வேறு சில பாடல் தொகுதிகளும் வெளிவரும்.

இவற்றை வெளியிட முன்வந்த மணிமன்றத்தாரின் தமிழ்த் தொண்டு பாராட்டற்குரியது.

ப. நீ.

## பதிப்புரை

இனிய மெட்டு, எளிய சொற்கள் அமைந்த பாடல்களைக் குழந்தைகள் விரும்புகிறார்கள்; பிறர் வற்புறுத்தலின்றிப் பாடியாடிக் களிக்கிறார்கள். இது அவர்கள் இயற்கை.

அரிய கருத்துக்கள் நிரம்பிய எளிய இனிய பாடல்கள்,குழந்தைகளின் அறிவை இவ்வியற்கைவழியில் வளர்க்கச் சிறந்த சாதனமாகும்.

இக் கருத்தினால் விளைந்த பயனே இப்பாடல் தொகுதி நூல். எளிமை, இனிமை, நுண்கருத்து ஆகிய பண்புகளுடன் மிளிரும் அழகிய பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. **பிராணிகள்** என்னும் நோக்குடன் இவை தொகுக்கப்பெற்றுள்ளன.

தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லவர்களான அறிஞர்களும், இளம் எழுத்தாளர்களும் இப் பாடல் தொகுதியை அணி செய்கிறார்கள். இவர்கள் யாவருக்கும் மன்றத்தின் நன்றி.

பாடல்களை வரவழைத்து உதவியவர் எனது நண்பர் திரு. **ப. நீலகண்டன்** அவர்கள். இவர் முயற்சி பாராட்டற்குரியது. மன்றத்தின் நன்றி இவர்க்கு உரியது.

தீ. சி. கு.

# பாடல் வரிசை

[பொருளுக்கேற்ப வரிசைப்படுத்தப்பட்டுள்ளவை]


| | பாடல் | ஆசிரியர் |
|---|---|---|
| 5. | பறவைகள் ... ... | சொக்கலிங்கம் |
| 6. | குயில் ... ... | ,, |
| 7. | மயில் ... ... | த. ப. நாதன் |
| 8. | கிளி ... ... | எஸ். சிதம்பரம் |
| 9. | ,, ... ... | 'தில்லைக்கூத்தன்' |
| 10. | கோழியும் குஞ்சும் ... | எஸ். உமைதாணுப்பிள்ளை |
| 11. | சிட்டுக்குருவி ... ... | சொக்கலிங்கம் |
| 12. | சிட்டு ... ... | 'குயிலன்', கரு. சுப்பையா |
| 13. | கருடன்-மீன் ... ... | பெ. தூரன் |
| 14. | கிளியும் மைனாவும் ... | ஆர். திருஞானசம்பந்தம் |
| 15. | ,, ... ... | ,, |
| 16. | காக்கை ... ... | "குயிலன்" |
| 17. | 'விளையாடவா!'... ... | எஸ். உமைதாணுப்பிள்ளை |
| 18. | பறவை சொன்ன பாடம் ... | சொக்கலிங்கம் |
| 19. | வண்டு ... ... | தே. ப. பெருமாள் |
| 20. | மின்மினி ... ... | இராம. வெ. சேதுராமன் |
| 21. | வண்ணாத்திப் பூச்சி ... | "அம்பலவாணன்" |
| 22. | "அணிலே வா!" ... | விசு. திருநாவுக்கரசு |
| 23. | நன்றியுள்ள நாய் ... | 'இளங்குமரன்' |
| 24. | வெள்ளை முயல் ... | கா.அப்பாத்துரைப்பிள்ளை |
| 25. | பசுவும் கன்றும் ... | கவிமணி தே. வி. |
| 26. | மாடு ... ... | "வளவிளங்கோன்" |
| 27. | கன்றுக்குட்டி ... ... | பெ. தூரன் |
| 28. | பூனைக்குட்டி ... ... | "கனகம்" |
| 29. | புள்ளிமான் ... ... | "குற்றாலநாதன்" |
| 30. | புள்ளிமானும் பையனும் ... | அழ. வள்ளியப்பா |
| 31. | காட்டானை ... ... | கா. அப்பாதுரைப் பிள்ளை |
| 32. | சிங்கம் ... ... | அழ. வள்ளியப்பா |

# பறவைகள்

குயிலே! குயிலே! உந்தனுக்குக்
கூவக் கற்றுக் கொடுத்தவர்யார்?
இயல்பாய் வந்த குரலம்மா!
ஈசன் அருளால் பெற்றதம்மா!

அழகிய மயிலே! உந்தனுக்கு
ஆடக் கற்றுக் கொடுத்தவர்யார்?
பழகி யெவரும் தரவில்லை
பரமன் அருளால் வந்ததம்மா!

வண்ணக் கிளியே! உந்தனுக்கு
வண்ணம் வந்த விதமென்ன?
வண்ணம் புதிதாய் வரவில்லை
வள்ளல் அருளால் வந்ததம்மா!

கோழீ! கோழீ! உந்தனுக்குக்
கூவ வந்த விதமென்ன?
வாழி ஈசன் செயலாலே
வந்த வித்தை யிதுவம்மா!

சொக்கலிங்கம்

# குயில்

கன்னங் கருங்குயிலே—உந்தன்
கான இனிமையிலே
இன்னல் நினைவகன்றே—மகிழ்
விளங்கி ஒளிர்ந்ததுவே.

கரிய நிறம்பெற்ற—காகம்
'கா' வென்று கத்தலல்லால்
அரியவுன் கீதம்போல்—பாட
அதற்கு முடிந்திடுமோ ?

குஞ்சு பொரித்திடவே—காகத்தின்
கூட்டினில் முட்டையிட்டாய்
விஞ்சு முலகினிலே—சந்ததி
விரும்பிச் செய்தாயோ ?

உருவம் பெருத்தாலும்—காகம்
உன்போல் வல்லதுவோ ?
கருமை இருந்தாலும்—பாட்டில்
கனிவுடை யாய்நீயே !

மக்கள் மனவூற்றைக்—கவரும்
மாண்புடை யாய்நீயே !
சொக்கும் நின்கீதம்—கேட்டுச்
சோர்வகற் றிடுவோமே.

நிறத்தை நோக்கிநில்லோம்—குயிலே !
நிறைகுணம் தொழுதிடுவோம்
தரத்தைப் பாராது—குயிலே !
தர்மம் போற்றிடுவோம்.

சொக்கலிங்கம்

# மயில்

ஈடும் எடுப்பும் இல்லாத
எழிலார் வண்ண மயிலே! நீ
ஆடும் அழகைக் கண்டிடவே
ஆயிரம் விழிகள் வேண்டுமடீ!

இருவிழி கொண்ட உயிரெல்லாம்
எழுந்து உன்றன் நடம்பார்க்கத்
திருவிழி யெல்லாம் தோகையினில்
தேங்கி நிற்கும் விதமென்ன ?

வாடா மலரைக் கொண்டையினில்
வாகாய் வைத்துச் சென்றவனை
ஆடல் தன்னுல் கவர்ந்திடவோ
அழகுத் தோகை விரிக்கின்றுய்?

மின்னும் ஒளிசேர் மென்மயிலே!
மேவும் பலவகை நிறமுடையாய்!
கன்னங் கரிய கார்முகிலைக்
கண்டதும் தோகை விரிப்பதும்ஏன்?

இன்பக் காட்சி வழங்குகின்ருய்
இதயச் சோர்வை ஓட்டுகின்ருய்
துன்பப் புழுதியைத் துடைக்கின்ருய்
தூய வாழ்வை ஊட்டுகின்ருய்!

க. ப. நாதன்

# கிளி

சின்னஞ் சிறுகிளியே!
சிங்கார வனப்பெண்ணே!
வண்ணச் சிறுமூக்கில்
வாய்த்த சிவப்பேது?

வானவெளி வீதியிலே
வழிநடந்த காலையிலே
பாஸ்கரனுர் எய்துவிட்ட
பாணங்கள் தாக்கியதோ!

பூங்கொம்பு தனிலமர்ந்து
பூரிப்புக் கொப்பளிக்க
மாங்கனியைக் கொத்தியதால்
மண்டியதோ சிவப்புநிறம்?

கனிதொங்கும் பூங்கொடியைக்
கவ்விநீ யாடியதால்
கன்றியதோ சிறுமூக்கு?
கடுஞ்சிவப்பு எய்தியதோ?

சின்னஞ் சிறுகிளியே!
சிந்தூர மூக்குனக்கு
வந்தவிதம் யாதோ?
எந்தனுக்குச் சொல்லாயோ?

எஸ். சிதம்பரம்

# கிளி

வண்ணக் கிளியே! வாவாவா!
வந்தே இன்ப மொழிதாவா!
கண்ணைக் கவரும் தாலியதைக்
கழுத்தில் காணக் கட்டியதார்?

செக்கச் சிவந்த வாயுடைய
சின்னஞ் சிறிய கிளியேவா!
பக்குவ மாகச் சீனியுடன்
பாலுஞ் சோறுந் தந்திடுவேன்

பச்சைக் கிளியே! கன்னத்தில்
பழகிப் பழகி முத்தங்கள்
இச்சை யாக வைத்திடுவேன்
என்னைக் கொத்திப் போடுவையோ?

நல்ல தமிழில் பேசுவையேல்
நான்கு முத்தம் நான் தருவேன்
பொல்லா மொழியில் பேசுவையேல்
போபோ வென்று போக்கிடுவேன்.

நீயோ கூட்டில் அடைபட்டாய்
நினக்கு ஆட வழியுண்டோ?
காயோ பழமோ எதுவேண்டும்
காவில் ஆட வருவாயேல்?

"தில்லைக்கூத்தன்"

# கோழியும் குஞ்சும்

குப்பையைக் கிண்டுது
கூளிப்பெட்டை—அண்டையில்
குதித்துச் சாடுது கோழிக் குஞ்சு

கூவி யழைக்குது
கூளிப்பெட்டை—இரையைக்
குஞ்சுக் கூட்டுது கூளிப்பெட்டை

வட்டம் போடுது
வானில் பருந்து—காகம்
வாயால் கௌவவே வந்து குனிக்குது

'கொர்' 'கொர்' என்குது
கூளிப்பெட்டை—கேட்டுக்
குப்புறப் பதுங்குது கோழிக்குஞ்சு

'கியாங்' 'கியாங்' என்குது
கோழிக்குஞ்சு—குப்பை
கிண்ட அழைக்குது கூளிப்பெட்டை

கூவி முழக்குது
கூரைச்சேவல்—குஞ்சைக்
கூட்டி அலைகுது கூளிப்பெட்டை

ஏமாந்து போனது
காகமும் பருந்தும்—கூடி
க்ஷேமமாய் மேயுது கோழியும் குஞ்சும்

வித்துவான்
எஸ். உமைதாணுப் பிள்ளை

# சிட்டுக் குருவி

சின்னஞ் சிறிய உருவினிலே—உன்றன்
சிங்கார அலகின் அமைப்பினிலே
நன்னய மாய்க்கீச் சிடுவதிலே—சிட்டு!
நல்ல புதுமை திகழுதம்மா!

பொழுது புலர்ந்து வருகையிலே—வானம்
பொலிந்து திகழ்ந்து விடியையிலே
பழுதின்றிக் கூடு கட்டிடவே—எங்கும்
பறந்த கொடிகள் கொணர்வாயம்மா!

வயல்களில் கூடு கட்டிடுவாய்—வீட்டு
வாசலில் கூடு கட்டிடுவாய்
பையர வில்லா இடந்தேடி—நல்ல
பலவிதக் கூடு அமைப்பாயம்மா!

ஓடிப் பறந்து திரிகையிலே—கண்ணில்
ஒளிரும் நெல்லைக் கொரித்தெடுத்தே
நாடி நலமாய் வளர்க்கு முன்றன்
நல்ல குஞ்சுக்குத் தருவாயம்மா!

தேடிப் பொருள்கள் பலசேர்த்தே-மண்ணைத்
தோண்டிப் புதைக்கும் மனிதனைப்போல்
வாடி வருந்தி இருக்கமாட்டாய்—நிதம்
வாய்த்ததை யுண்டு களிப்பாயம்மா!

ஆனந்த மாகப் பறந்திடுவாய்—மக்கள்
அறிவை விளக்கியே வாழ்ந்திடுவாய்
வானவெளியில் கிடைத்ததையே—உண்டு
வளரும் இனிய குருவியம்மா!

சொக்கலிங்கம்

# சிட்டு

சின்னச் சின்னச் சிட்டு
சிங்காரச் சிட்டு
நெல்லுப் போலே மூக்கு
நேர்த்தி யான நாக்கு
பட்டுப் போல மேனி
வட்டச் சின்னக் கண்கள்
வானந் தன்னில் பறக்கும்
வந்து சற்றே இருக்கும்
காட்டுக் கிரை தேடக்
காற்றைப் போலப் பறக்கும்
வீட்டுக் கூறை மேலே
கூட்டில் வந்து படுக்கும்.

"குயிலன்"

சின்னஞ் சிறிய சிட்டே—உனது
தோழமை வேண்டுகின்றேன்
இன்னம் என் அருகிலே—நீ
ஏன்வரக் கூசுகின்றாய்?
உருண்ட முகமும் காலும்—உன்
ஒளி நிறைந்த கண்களும்
மருண்ட உன் பார்வைகளும்—என்
மனத்தைக் கொள்ளை கொண்டதுவே!
சிட்டுச் சிட்டெனவே யொலி—நீ
செய்யும் அழகில் ஒன்று
எட்டுது என்றனுக்கு—"யார்
அடிமை சொல்?" என்பதுபோல்!

கரு. சுப்பையா

# கருடன் - மீன்

## கருடன்

வட்ட மிடும் கருடா !—திருமால்
வாக னமாங் கருடா !
பட்ட மதைப் போலே—அசையாது
பறந்து மிதக்கும் கருடா !
சங்கு முகத்துக் கருடா !—தரைமேல்
தாவிப் பாயும் கருடா !
எங்கள் தாத்தா கண்டால்—உடனே
எழுந்து வணங்கும் கருடா !

## மீன்

மீனே ! மீனே ! மின்னிடும் மீனே !
தண்ணீ ருக்குள் தாவிடும் மீனே !
கெண்டை அவுரி கெழுத்தி மீனே !
எந்நே ரமும்நீ தண்ணீ ருக்குள்
மூழ்கி யிருந்தால் மூச்சு வருமோ ?
என்றும் தண்ணீர் வீட்டி லிருந்தால்
சொக்காய் இல்லை துணிகளும் இல்லை
கூதல் வந்தால் ஏது செய்வாய் ?

பெ. தூரன்

# கிளியும் மைனாவும்

மைனா :

சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை
சொகுசுப் பச்சை இருந்தென்ன ?
என்னைப் போலப் பலபேச்சு
எப்படிப் பேச முடியும் உன்னால் ?

கிளி :

கலகல வென்னும் மைனாவே !
கவனமாய்க் கேளு சொல்லுவதை
பலபல பேசிப் பயன்என்ன ?
பக்குவப் பேச்சே பேச்சாகும்.

அர்த்தம் இல்லாக் கருத்துக்களை
அள்ளிச் சொரிவது அழகாமோ ?
தர்க்கம் எதற்கு உன்னோடு ?
தலையை வலிக்கும் அம்மாவோ !

மைனா :

மூக்கில் சிவப்பு இருந்தாலும்
முதுகில் பச்சை மிளிர்ந்தாலும்
வாக்கில் கலகல இல்லையெனில்
வர்ணத் தாலே என்னசுகம் ?
கலகல கலகல என்றாலே
கானகம் எல்லாம் ஒலித்திடுமே !

ஆர். திருஞானசம்பந்தம்

# கிளியும் மைனாவும்

(தொடர்ச்சி)

பொலபொல பொலபொல என்றேநான்
பூக்களைப் போலப் பூரிப்பேன்!
என்போல் பேச ஏலாது
இத்தனை கர்வம் ஏன்தானோ?
மின்போல் வாராள் பொன்னுத்தா
விரைந்து கேட்போம் வந்திடுவாய்.

**பொன்னுத்தா:**

பச்சைக் கிளியே! வா! வா! வா!
பாங்காய்ப் பக்கம் வா! வா! வா!
இச்சைக் குகந்த மைனாவே!
இங்கித மாக இங்கேவா!
காட்டு மரங்களில் தங்கஒளி
காணுது இன்பம் அடடாஓ!
பாட்டுப் பாடிப் பரவசமாய்
பறந்து வாரும் பட்சிகளே!
எந்தக் குரலாய் இருந்தால் என்?
எந்த நிறமாய் இருந்தால் என்?
சிந்தைக் கினிய பறவைகளே!
சிரித்துப் பாடி வாழ்வீரே!

ஆர். திருஞானசம்பந்தம்

# காக்கை

அன்று அம்மா காக்கைக்கு
அன்னம் வைத்துக் கா, கா, கா,
என்று சப்த மிட்டவுடன்
எங்கிருந் தோவொரு கருங்காகம்

வந்து என்ன செய்தது பார்!
மற்ற எல்லாத் தோழரையும்
சொந்தப் பேச்சில் கா, கா, கா
சொல்லிக் கூப்பிட் டுண்டதுவே!

எல்லாம் கூடி ஒற்றுமையாய்
எவ்வா றுண்டன பார்த்தாயா?
பொல்லா நாய்கள் இரண்டானல்
போடும் சண்டை போலல்ல!

காக்கை கூடச் சேர்ந்துண்ணக்
கண்டோம் மனிதர் உயர்ந்தவர்கள்
நாய்க்குணம் போக்கி ஒற்றுமையாய்
நன்ருய் வாழ்ந்திட வேண்டுமடா!

"குயிலன்"

# "விளையாடவா!"

கிளியே! என்னோ டாடவந்தால்
கிண்ணம் நிறையப் பால்தருவேன்
கிட்டுங் கனிகள் தந்திடுவேன்

*அளியே! என்னோ டாடவந்தால்
அருந்த அமிர்தம் வார்த்திடுவேன்
அமர பீடம் அளித்திடுவேன்

குயிலே! என்னோ டாடவந்தால்
கொதிக்கும் பசியைப் போக்கிடுவேன்
கூடுங் கட்டிக் கொடுத்திடுவேன்

மயிலே! என்னோ டாடவந்தால்
மனம்போல் உணவை அளித்திடுவேன்
மாடங் கட்டி வைத்திடுவேன்

கூவும் கோழி நீ! ஆடவந்தால்
குறுநொய்ச் சோறுங் கொடுத்திடுவேன்
குடும்பம் முழுதும் காத்திடுவேன்

கூவும் புறாவே! ஆடவந்தால்
கொத்துக் கடலை தந்திடுவேன்
கூறும் பகையும் ஒழித்திடுவேன்

காகமே! என்னோ டாடவந்தால்
கைப்படு பண்டமும் உதவிடுவேன்
கவலை நீங்கக் காத்திடுவேன்

ஏகமாய் நிற்கும் என்னுடனே
இரங்கி யாடவும் வாரீரோ?
என்றும் தோழமை கொள்வீரோ?

எஸ். உமைதாணுப்பிள்ளை



*அளியே - வண்டே

# பறவை சொன்ன பாடம்

சின்னச் சின்னப் பறவையே!
சிங்காரப் பறவையே!
என்ன கொண்டு வந்தனை ?
என்று கிட்டச் சென்றனன்.

கிட்டக் கிட்டப் போகவே
எட்டி எட்டிப் போனதே
மிட்டாய் கொண்டு தருவேன்
விரைந்து வாவா என்றேன்.

பள்ளிக் கூடம் போகாத
பைய னோடு விளையாடேன்
கள்ள மின்றிப் பள்ளிக்குக்
கருத்தாய்ப் போய்வா என்றதனல்

புத்தி யாகப் பறவையின்
புத்தி மதியை மேற்கொண்டு
நித்தம் நித்தம் பள்ளிக்கு
நேராய்ப் போய்நான் வாரேனே.

சொக்கலிங்கம்

# வண்டு

வண்டு பறக்குது சோலையிலே—நல்ல
வாசம் அளையுது பூவினிலே
கண்டு குடிக்குது தேனினையே—இசை
காது குளிர்ந்திடத் தந்திடுமே!

தென்றல் என்னும் தொட்டிலிலே—பாய்ந்து
சிந்தை குளிர்ந்தே ஆடிடுமே
என்றும் இனிய மகிழ்ச்சியினை—எய்தி
இங்கிதத் தூது சென்றிடுமே!

பொன்னென ஒன்று சுடர்விடுமே—பச்சைப்
போர்வையைக் கட்டிய தொக்குமொன்று
இன்னுமே ஒன்று சிவந்திருக்கும்—இன்னும்
எத்தனை நிறமோ எண்ணமுண்டோ ?

எத்தனை மலரைக் கண்டிடுமோ ?—இதுவும்
எங்கெலாம் சுற்றி யலைந்திடுமோ ?
சித்தம் தளர்ந்திது நிற்பதுண்டோ ?—உழைப்
தேர்ச்சி மிகுந்திடும் தோழனம்மா! [பில்

என்றும் உழைக்கச் சோர்வதில்லை—துன்பம்
எய்தி வருந்தவும் காண்பதில்லை
குன்று உழைப்பின் மேன்மையினை—இந்தக்
குவலயம் காணவே வாழ்ந்திடுமே!

தே. ப. பெருமாள்

# மின்மினி

சின்னவொரு மின்மினியாள்
செய்கின்ற தொண்டைச்
சிறுவர்களே நீங்களெல்லாம்
சிந்திக்க வேண்டும்
அன்றொருநாள் வல்லிருளில்
யான்மட்டும் வந்தேன்
அஞ்சாதே எனச்சொல்லி
ஆறுதலைத் தந்தாள்
என்னோடு விளக்கேந்தி எழுச்சிதனையூட்டி
இதுதானே வழியென்று
எனக்கவள்தான் காட்டி
அன்பென்றால் என்னவென்று
யானறியச் செய்தாள்
அவளன்பை யொருநாளும்
யான் மறவேன் பாரீர்!
தீப்பொறியில் எங்கணுமே
திரிகின்றாள் என்பீர்
தீப்பொறியென் றெண்ணாதீர்
தீங்கற்றாள் காண்பீர்
பூப்போன்ற உயிர்கள்தமைப்
பூவுலகில் யாண்டும்
பொறுப்பின்றிக் கொல்கின்றார்
புதுமையற்ற செய்கை!
காப்பில்லா இவ்வுலகிற் கவலையின்றி
காண்பார்க்குத் தீப்போலே [வாழக்
காட்சியளிக் கின்றாள்
மாப்பெரிய உளம்வாய்ந்த
மங்கையவள்போலே
மனத்தளவு மிகப்பரந்த
மகிழ்ச்சியுடன் வாழ்வீர்!

இராம. வெ. சேதுராமன்

# வண்ணாத்திப் பூச்சி

பலபல வென்று விடியுமுன்னே
புதுமலர் நாடி வண்ணாத்தி
மலரின் இனங்கள் வளரும்பல
வனங்களைத் தேடி அலைந்ததுவே.

செல்லும் வழியில் இருந்ததொரு
சுந்தர மான தோட்டமதில்
மல்லிகை முல்லை சம்பங்கி
மலர்கள் கண்டது களித்திடவே.

அரும்பு மாறி அலர்ந்திருந்த
அழகிய பெரிய மலர்களிலே
கரும்பினும் மிக்க சுவையுள்ளதேன்
களித்துப் பொங்கிட இருந்ததுவே.

படபட வென்று சிறகடித்து
பறந்து சென்றுமே வண்ணாத்தி
கடகட வென்று தேன்குடித்துக்
களித்துக் குதித்துப் பறந்ததுவே!

"அம்பலவாணன்"

# “அணிலே வா!”

அணிலே! அணிலே! வா வா!
அத்திப் பழம் தின்ன வா!
மழலை மொழி கேட்க வா!
மைந்த னிவன் காண வா!

பலா மரத்தைப் பார்க்கிறான்
பார்த்துப் பார்த்து விம்முறான்
பால் மறந்து நிற்கிறான்
பறந்து விளை யாட வா!

தவமி ருந்து பெற்றவன்
தவழ்ந்து வந்து காண்பவன்
முகம லர்ந்து பார்க்கிறான்
முன் குதித்து ஓடிவா!

வித்துவான்
விசு. திருநாவுக்கரசு

# நன்றியுள்ள நாய்

நாயை வளர்த்திடுவாய் பாப்பா!—அதை
நன்ருகக் காத்திடுவாய் பாப்பா!

ஒருபிடி சோறுவைத்தால் பாப்பா!—அது
ஒருநாளும் மறக்காது பாப்பா!

நன்றி யறியும்குணம் பாப்பா!—அந்த
நாயினிடம் மிகவுண்டு பாப்பா!

தன்னை வளர்த்தவரைப் பாப்பா!—அது
தயங்காம லேயறியும் பாப்பா!

வாலை யாட்டிக்கொண்டு பாப்பா!—அது
வரும்போது நாம்மகிழ்வோம் பாப்பா!

வீட்டைக் காத்திருக்கும் பாப்பா!—அது
வேற்ருளை விட்டிடாது பாப்பா!

கொள்ளை செயுந்திருடர் பாப்பா!-வந்தால்
குரைத்துத் துரத்திவிடும் பாப்பா!

நாயை அடிக்காதே பாப்பா!—அதை
நண்பஞகக் கொண்டுமகிழ் பாப்பா!

"இளங்குமரன்"

# வெள்ளை முயல்

வெட்டி வெட்டிக்
கண் சிமிட்டும்
வெள்ளை முயலே! வாராய்
எட்டி நின்று
பார்ப்ப தேனோ?
கிட்டவரு வாயே.

காது யர்த்திக்
கண்ணு ருட்டிக்
கள்ளப் பார்வை பார்க்கும்
நீதி என்ன?
கிட்ட வந்து
சேதி சொல்லு வாயே.

குட்டி மேகம்
போலக் கும்பல்
கும்ப லாக வந்து
வட்ட மாகச்
சுற்றி யாடி
எட்டி ஓடல் ஏனோ?

சின்னஞ் சிறு
பிள்ளை போலச்
சிரித்து விளை யாட
உன்னை அண்டி
நல்வெண் மின்னல்
என்ன ஓடல் ஏனோ?

கா. அப்பாத்துரைப் பிள்ளை
எம். ஏ., எல். டி.,

# பசுவும் கன்றும்

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி

அம்மா என்குது
வெள்ளைப் பசு—உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி

நாவால் நக்குது
வெள்ளைப் பசு—பாலை
நன்ருய்க் குடிக்குது
கன்றுக் குட்டி

முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு—மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி

கவிமணி
தேசிக விநாயகம் பிள்ளை

# மாடு

ஆமா உன்றன் பாட்டு நன்றே!
'மாமா' என்று கூப்பிட் டாயே!
மாமன் எங்கே சென்றான்? ஐயோ,
காம தேனு வுன்னை விட்டே?

தேனே உன்பால் யாரும் கொள்வர்;
நானே நாளும் கொள்வேன் பாலே!
புல்லைத் தின்று தேன்பால் தந்தாய்;
புல்வில் என்ன? தேனில் லையே!

வெள்ளைப் பாலைத் தந்தாய் நீயே!
வெள்ளைப் புல்லைத் தின்றா யோநீ!
'மாமா' என்று சொன்ன மாடே,
'ஆமாம்' என்று கூறு வாயே!

பெற்ற தாயின் அன்பு கொண்டாய்!
உற்ற எம்மை ஊக்கிக் காப்பாய்!
மைந்தன் என்னை வளர்க்கும் மாடே!
எந்த மொழியால் உன்னைப் புகழ்வோம்?

"வளவிளங்கோன்"

# கன்றுக்குட்டி

'அம்மா அம்மா' கன்றுக்குட்டி!
ஆரைக் கூப்பிட்டாய் கன்றுக்குட்டி!
சும்மா சும்மா கத்தாதே
அம்மா சீக்கிரம் வந்திடுவாள்.

'அம்மா அம்மா' கன்றுக்குட்டி!
ஆரைக் கூப்பிட்டாய் கன்றுக்குட்டி!
பச்சைப் புல்லை நான் தருவேன்
பசியைப் போக்கிக் கொள்ளாயோ

'அம்மா அம்மா' கன்றுக்குட்டி!
ஆரைக் கூப்பிட்டாய் கன்றுக்குட்டி!
அம்மா சீக்கிரம் வந்திடுவாள்
அன்பாய்ப் பாலும் தந்திடுவாள்.

பெ. தூரன்

# பூனைக்குட்டி

வெள்ளை நிறத்துக் குட்டி
வேகம் மிகுந்த குட்டி
துள்ளி வருவாய் குட்டி
தூங்காதே பூனைக் குட்டி

சாம்பல் நிறத்துக் குட்டி
தாவி விழுந்த குட்டி
சோம்பல் இல்லாத குட்டி
துணிவுள்ள பூனைக் குட்டி

கறுப்பு நிறத்துக் குட்டி
கண்கள் பெருத்த குட்டி
வெறுப்பு மறந்த குட்டி
விளையாடும் பூனைக் குட்டி

எலியை விடுவாய் குட்டி
என்னிடம் வாடா குட்டி
புலியைப் போல்பாயும் குட்டி
பூனையின் செல்வக் குட்டி.

"கனகம்"

# புள்ளிமான்

துள்ளிக் குதிக்கும் புள்ளிமானே!
சோதிப் புள்ளி எங்கடைந்தாய்?
வெள்ளிப் புள்ளிப் பொன்னுடலும்
விரும்பி இறைவன் தந்ததுவே.

அங்கும் இங்கும் எங்கணுமே
அலைந்து திரியும் கண்களுமேன்?
மங்கை கண்டு நாணிடவே
மருண்ட பார்வை பார்ப்பதற்கே!

வேலும் வில்லும் இரைக்காக
வெருட்டி வந்தால் என்செய்வாய்?
காலை நம்பி இருக்கின்றேன்
காற்றாய்ப் பறந்து மறைகின்றேன்.

வலியார் எளியார் மோதுங்கால்
எளியார் மீளும் வகையென்ன?
எளியார் மீளும் விதமெல்லாம்
ஈசன் செயலே அறியாயோ?

"குற்றாலநாதன்"

# புள்ளிமானும் பையனும்

பையன் : புள்ளி மானே ! கோபம் நீ,
கொள்வ தென்ன கூறிடுவாய் !

மான் : கட்டை யவிழ்த்து விட்டிடுவாய்
காட்டை நோக்கிப் போகின்றேன்

பையன் : ஐயோ உன்னை விட்டிடின்,
அரை விநாடி செல்லுமோ ?

மான் : புறப்படு வாய்நாம் இருவருமே
போக லாம்நல் காட்டிற்கு

பையன் : காட்டை நோக்கிப் போகவா ?
கல்லும் முள்ளும் குத்தும்மே
அம்மா அப்பா பாட்டியை
ஐயோ விட்டு வரவாநான் ?
இருட்டி விட்டால் விளக்கில்லை
இரவில் சிங்கம் உறுமுமே !
ஆசைப் பட்ட பொருளெல்லாம்
அம்மா வந்து தருவாளோ ?

மான் : அப்ப டித்தான் எனக்கும்மே
அதிக கஷ்டம் இல்லையோ ?
சுற்றத் தார்கள் வருவாரோ ?
துள்ளிச் சுற்ற முடியுமோ ?
ஆசைப் பட்ட பொருளெல்லாம்
அடைந்து தின்ன முடியும்மோ ?
கழுத்து நோக எனையார்
காட்டில் கட்டிப் போட்டிடுவார்

பையன் : ஐயோ பாவம் இப்போதே
அவிழ்த்து விட்டேன் ஓடிடுவாய்.

அழ. வள்ளியப்பா

# காட்டானை

காடும் மேடும் திரிந்தோடிக்
காட்டு மரங்கள் அடர்த்ததன்பின்
வீடும் தேடி வந்தனையோ ?
வீறிட் டுறுமும் காட்டானை !

பாயும் பாம்போ ? பாம்பிருக்கும்
பயங்கொள் புற்ரோ ? பாழ்ங்குகையோ ?
நேய மாக நீதொடினும்
நெருங்கத் துணியோம் காட்டானை !

ஓங்கும் மலைபோல் மத்தகமும்
ஊச லாடும் துதிக்கையும்
வாங்கும் காதும் அச்சுறுத்த
ம்ணிக்கண் காட்டும் காட்டானை !

கருங்கற் பாறை எனப்பரந்து
கவிந்த முதுகும், காலன் தன்
சுருங்கைக் கதவம் எனும்நால்வாய் *
தூங்கும் மணிகொள் காட்டானை !

காட்டில் திரிந்து கரடிகளும்
கடுவாய் புலியும் அடர்த்திளைத்து
நாட்டில் நாங்கள் விளையாட
நயந்து வந்த காட்டானை !

கா. அப்பாத்துரைப் பிள்ளை



* நால்வாய்=தொங்கும் துதிக்கை.

# சிங்கம்

சிங்கம், எங்கே பார்க்கிருய் ?
சீறிப் பாய எண்ணமோ ?
கொண்டு வந்து உன்னைத்தான்,
கூட்டில் போட்டு விட்டோமே !

வெள்ளி போலத் தலைமயிர்,
விரித்து நிற்கும் சிங்கமே !
கொள்ளி போன்ற கண்களால்,
'குறுகு றென்றே பார்க்கிருய் !

கத்தி போல நகங்களால்
கம்பி யைத்தான் கீறலாம்.
உயிரைக் கொல்ல முடியுமோ ?
உடலைக் கிழிக்க முடியுமோ ?

மிருக ராஜ சிங்கமே,
மிரட்டி ஏனோ பார்க்கிருய் ?
கூட்டை விட்டு வரவேதான்,
பூட்டுப் பூட்டி இருக்குதே !'

அழ. வள்ளியப்பா

மணி வெளியீடு!

# அமுத மொழி

## குழந்தைப் பாடல்கள்

வாகனங்கள் பொருள்கள் பற்றிய
அரிய பாடல்களின் தொகுதி

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
முதலிய பல அறிஞர்கள் பாடியவை

**விரைவில் வருகிறது!**

**மணி மன்றம்**
தமிழ்நூல் வெளியீட்டகம்
மதுரை ரோடு :: திருச்சிராப்பள்ளி